**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**
2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 07 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**I.A.No.4/2025 in O.S.No.262/2023**

1) ஆறுமுகத்தம்மாள்
2) சின்னராஜா
3) மூர்த்தி
4) பேச்சியம்மாள் ...மனுதார்கள்/பிரதிவாதிகள்

**//எதிர்//**

1) சுடலைமணி
2) ஜெயராணி

...எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 23.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மணிகண்டன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பேச்சிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டு, ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 8 விதி 3(A) மற்றும் 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது அதனுடன் சேர்ந்த நகல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். அதன் அசல் ஆவணங்கள் திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 25/2023 தாக்கல் செய்து அந்த நகல் தற்போது தான் கிடைக்கப்பெற்றது. அந்த ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்களாகும். எனவே மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)எதிருரையின் சுருக்கம்**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதார்கள்/பிரதிவாதிகள் தவறான சங்கதிகளோடு திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.25/2023 ஐ தாக்கல் செய்துள்ளார்கள். அந்த அசல் வழக்கில் இந்த 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டு உள்ளது உண்மை. மனுதார்கள் வழக்கை மட்டும் தாக்கல் செய்துவிட்டு விசாரணை நடைபெற்று வரும்போதே "நான் ஷை வழக்கில் வெற்றி பெற்று விட்டேன். தீர்ப்பும், தீர்ப்பாணையும் என் பக்கம் உள்ளது" எனக்கூறி தினம்தினம் இந்த எதிர்மனுதார்களை இடைஞ்சல் செய்து வருகிறார்கள். "உன் வேலையை தொலைத்து விடுவேன்" என்றும் கூறி வருகிறார். அதனால்தான் இந்த எதிர்மனுதார்கள் பிராது தபசில் சொத்தை மனுதார்கள் இடைஞ்சல் செய்யக்கூடாது என நீதிமன்றத்தில் உத்தரவு வாங்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர். அசல் வழக்கை முடிவுக்கு கொண்டு வரவிடாமல் வேண்டுமென்றே மனுவில் கூறியுள்ள

ஆவணங்களை தற்போது மனுதார்கள் தாக்கல் செய்துள்ளனர். மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 10வது ஆவணம் திருநெல்வேலி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.25/2023ல் ஆணையர் அறிக்கையைத் தவிர மற்ற ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் ஆகும். பிராது தபசில் சொத்தின் மாதிரி வரைபடம் என காட்டப்பட்டுள்ள வரைபடத்தில் பூமியின் அமைப்பிற்கும், நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கும் விரோதமானது ஆகும். மற்றபடி இந்த மனுதார்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கு தபசில் சொத்திற்கு சம்பந்தப்பட்டவை அல்ல. எனவே வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இம்மனு எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

5) இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

6) மனுதாரர் தாக்கல் செய்துள்ளஆவணங்களின் நகல்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது தாக்கல் செய்ததாகவும் திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 25/2023ல் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்திருந்ததாகவும் தற்போது தான் அந்த ஆவணத்தின் நகல் மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றதாகவும் மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்ட சங்கதி இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

7) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிப்பதினாலேயே, மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டதாக கருத முடியாது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நிரூபிக்கும்

பொறுப்பு மனுதாரர்களையே சார்ந்தது ஆகும். அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் ஆவணங்கள் திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்25/2023ல் அசல் ஆவணங்களை தாக்கல் செய்திருந்ததால் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்யப்படும் காலதாமதத்தை மன்னிக்கும் பொருட்டே மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண் 25/2023 வழக்கு நிலுவையில் இருப்பது எதிர்மனுதாரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அசல் ஆவணங்கள் அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்று கூறப்பட்ட சங்கதி இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

8) மனுதாரர்கள் ஆவணங்களை குறியீடு செய்யும் போது, எதிர்மனுதாரர்கள் தனது தரப்பு ஆட்சேபணைகளை தெரிவித்து, அந்த ஆட்சேபணைகளை நீதிமன்றம் பரிசீலனை செய்து, அதனடிப்படையில் மேற்படி ஆவணங்களின் ஏற்புடைமையை முடிவு செய்து கொள்ளலாம். எனவே, இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை என இந்நீதிமன்றம் கருதி, இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என முடிவு செய்துகிறது.

9) தற்போதைய ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னிக்க கோரும் இம்மனுவில், மனுதாரர்கள் தாக்கல் செய்ய வேண்டுமென கூறும் ஆவணங்களின் சாட்சியத்தன்மையை ஆராய்வது ஏற்புடையதாக இருக்காது. இவ்வழக்கிற்கு மேற்படி ஆவணங்கள் அவசியமானதா? இல்லையா? என்பதை வழக்கின் இறுதி கட்டத்தில் தீர்மானித்துக் கொள்ளலாம் என்பதாலும், குறுக்கு விசாரணையின் போது

இவ்வழக்கு ஆவணங்களை குறித்து சாட்சியிடம் கேள்விகள் எழுப்பி தெளிவு பெற எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்பு உள்ளதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10) இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 07 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
order uploaded on 08.07.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.07.08 11:48:32 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருநெல்வேலி

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> - இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
order uploaded on 08.07.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.07.08 11:48:38 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

2 வது கூடுதல்  மாவட்ட
உரிமையியல் நீதிமன்றம்,
திருநெல்வேலி**I.A.No.4/2025 in**
**O.S.No.262/2023**
சீரான – உத்தரவு
**நாள்–07.07.2026**